# Joint Call on Prime Minister by National Security Advisers / Secretaries of Security Councils attending the "Delhi Regional Security Dialogue on Afghanistan”

November 10, 2021

## ‘ஆப்கானிஸ்தான் தொடர்பான டெல்லி பிராந்திய பாதுகாப்பு உரையாடலில்’ கலந்து கொள்ளும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள்/ பாதுகாப்பு கவுன்சில்களின் செயலாளர்கள் பிரதமருக்கு கூட்டு அழைப்பு

**நவம்பர் 10,2021**

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவல் இன்று நடத்திய ஆப்கானிஸ்தான் மீதான மீதான பராதிய பாதுகாப்பு உரையாடலுக்காக டெல்லி வந்துள்ள எழு நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில்களின் தலைவர்கள், பேச்சுவார்த்தை முடிந்த பிறகு பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியை கூட்டாக சந்தித்தனர்.

இரான், கஜகஸ்தான்,கிர்கிஸ்தான்,ரஷ்யா, தஜகிஸ்தான்,துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெக்கிஸ்தான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள், பிரதமருக்கு தங்கள் கருத்துக்களில்,உரையாடலை ஒழுங்கமைப்பத்தின் இந்தியாவின் முமுயற்சி மற்றும் பரிமாற்றங்களின் தரம் ஆகியவற்றை பாராட்டினர்.ஆப்கானிஸ்தான் நிலைமை குறித்த அந்தந்த நாடுகளின் முன்னோக்குகளையும் அவர்கள் தெவித்தனர்.

தொற்றுநோயால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் டெல்லி பாதுகாப்பு உரையாடலில் மூத்த பிரமுகர்கள் பங்கேற்றதை பிரதமர் பாராட்டினார்.

ஆப்கானிஸ்தானின் சூழலில், பிராந்தியத்தில் உள்ள நாடுகள் கவனம் செலுத்த வேண்டிய நான்கு அம்சங்களை அவர் வலியுறுத்தினார்: உள்ளடக்கிய அரசாங்கத்தின் தேவை; ஆப்கானிஸ்தான் பிரதேசம் பயங்கரவாதக் குழுக்களால் பயன்படுத்தப்படுவதை சக்கிப்புதன்மையற்ற நிலைப்பாடு; ஆப்கானிஸ்தான்னில் இருந்து போதைபொருள் கடத்தல் மற்றும் ஆயுத கடத்தலை எதிர்ப்பதற்கான உத்தி; மற்றும் ஆப்கானிஸ்தான்னில் அதிகரித்து வரும் முக்கியமான மனிதாபிமான நெருக்கடியை நிவதி செய்தல்.

பிராந்திய பாதுகாப்பு உரையாடல் மதிய ஆசியாவின் மிதமான மற்றும் முற்போக்கான கலாச்சார மரபுகளை புதுப்பிக்கவும், தீவிரவாத போக்குகளை எதிர்க்கவும் செயல்படும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

நியூ டெல்லி
**நவம்பர் 10, 2021**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.